முன் மொழிவு - 2022

# ஒருமைப்பாட்டை உருவக்கும் படைப்பாளிகளாக உருவாகுதல்

ஒருமைப்பாட்டை வளர்ப்பதும் மக்களிடைடையே கூட்டிணைப்பை உருவாக்குவதுமே இன்றைய காலகட்டத்தின் மிகப்பெரிய சவால்களாக இருக்கிறது. இன்றைய காலகட்டமானது, எதிர்மறையான வளர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருக்கிறது (அ) அதற்கு முன்னுரிமை வழங்கும் வகையில் தங்களை தயார்படுத்திக்கொண்டு வருகிறது.
மனிதன் தன்னை உலக படைப்பனைத்தோடும் உறவு கொண்டாடும் வகையில் தக்கவைத்துக்கொண்டாலும் பேரிடர்களும் பெருந்தொற்றுகளும் மனிதனுக்கு பெரும் சவாலாகவே இருக்கின்றன.: ஆயினும் நாம் இந்த கடினமான சூழலிலிருந்து நம்மை தற்காத்துக்கொள்ளவும் மீண்டு வரவும் நம் அனைவரின் ஒற்றுமையும் ஒருங்கிணைந்த பாதுகாப்பு முயற்சிகளையும் கடைபிடித்தால் மட்டுமே  இவற்றிலிருந்தும் நாம் மீண்டு வரமுடியும்.

இந்த உலகம் சமூக, அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாச்சார ரீதியிலும் சுயநலப் போகிலான முரண்பாடுகளைக் கொண்டிருப்பதைப்போல, நாடுகளுக்கிடையேயும் சமூகங்களுக்கிடையேயும் இன்னும் குறிப்பிட்டுச் சொல்லுவதானால் குடும்பங்களுகுள்ளேயும் கூட பிரிவினைகளையும் பிளவுகளையும் உர்வாகக் காரணமாயிருக்கிறது. ஏன் கிறித்தவர்களாயிருக்கும் நமக்குள்ளேயும் கூட இவைகளை எதிர்ப்பதற்கும் அல்லது தங்களின் எதிப்புணர்வை வெளிப்படுத்தும் ஆற்றலையும்கூட நாம் பெற்றிருக்கவில்லை: இன்னும் சொல்லப்போனால், திருச்சபைக்கும் திருச்சபையின் மக்களுக்கும் கூட வேறுபாடுகளும் பிரிவினைகளும் தொடர்ந்தவண்ணம் இருக்கும் இக்காலகட்டத்தில் வேற்றுமைகளைக்கடந்து, சகோதரத்துவம் நிறைந்த பிறரன்பின் சாட்சிகளாக நம்மை நாம் நிரூபிக்கவேண்டியவர்களாக இருகிறோம்.

உலகின் சில நாடுகளில் இத்தகைய முரண்பாடுகள் இருந்துவரும் சூழலில் ஆன்மீகத்தை தவறாக பயன்ப்டுத்தியும் வன்முறையிலும் பாலியல் வன்கொடுமையிலும் சிலர் ஈடுபடுவதால் மக்களிடையே நம்பிக்கையின் வலு குறைந்து வருவதாக உணருகிறர்கள்.

சமீப காலமாக இத்தகைய எதார்த்தமான உண்மைகளை மிகத் தீவிரமாக உணர்ந்தறிந்து அதற்கான ஒரு மாற்று செயல்திட்டத்தை தெசே அமைப்பு முன்னெடுக்கிறது. அதனடிபடையில் அனைத்து மக்களுக்குமான பாதுகாப்பு மற்றும் நம்பிக்கைக்குறிய களமாக “தெய்சே” இருக்க வேண்டும் என விரும்புகிறோம்: அதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்யவேண்டும் என்றும் நாங்கள் விரும்புகின்றோம். {www.taize.fr/protection}

நம்முடைய திருச்சபை அனைத்து மக்களுக்குமான நட்புறவின் இடமாக அறியப்பட்டிருக்கிறது. அதற்கு நற்செய்தியின் மதிப்பீடுகளின் அடிப்படையில் ஆழமான விசுவாசம் கொண்ட தீவிர மனமாற்றம்தான் இன்றைய உடனடித் தேவையாக இருக்கிறது.

இயேசுகிறிஸ்து தன்னையே ஒப்புக்கொடுத்து, தமது பேரன்பினால் அவரது சாயலில் நாம் சகோதர சகோதரிகளாய் வாழ, தேவையான சக்திமிக்க புதிய நீரூற்றை திறந்து வைத்தார். அதன் வழியாக மனிதகுலத்தின் கண்ணியம் காக்கப்படவும் படைப்புகள் அனைத்தும் பாதுகாப்பில் பராமரிக்கப்படவும் விரும்பினார்.

மனித குலத்தை கடவுளின் அன்பில் ஒன்றிணைக்கவந்த இயேசு கிறிஸ்து, சகோதர ஒன்றிணைப்பினால் நாமணைவரும் அவரது சாயல்களாக இருக்க வேண்டுமென விரும்புகிறார்.

அதற்கான முன்மொழிவுகளாக இந்த 2022 ஆம் ஆண்டிற்கான சிந்தனைகளைத் தூண்டும் கேள்விகளை நாம் எழுப்ப வேண்டும் என நான் விரும்புகிறேன்.

படைப்பணைத்துடன் சேர்ந்து, மனித குலத்திலும், நமக்கு நெருக்கமானவர்களுடனும் நமது திருச்சபையிலும் சமூகத்திலும் இன்னும் ஒருபடி மேலே நமது இதயத்திலும் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் வளர்த்தெடுப்பதில் நம்முடைய பங்களிப்பு என்னவாக இருக்கப்போகிறது...? - **அருட்பணி. அலோய்ஸ்**.

- கீழ்க்காணும் ஆறு முன்மொழிவுகளில் ஒவ்வொன்றிற்கும் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கங்கள் நமது எண்ண பிரதிபலிப்புகளை ஆழப்படுத்த உதவும். இச்சிறு மேற்கோள்களுக்கான விரிவான விளக்கங்களை வலைத்தளம் மற்றும் வலையொலி வாயிலாகவும் மற்றும் “தெய்சே” வில் நடைபெறும் கலந்தாய்வுக் கூட்டங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

- இம் முன்மொழிவுகளுக்குரிய விவிலிய குறிப்புகளும் விளக்க உரைகளும் நிகழ்நிலை (online) யில் பதிப்பிக்கப்படும். “தெய்சே” வின் விவிலிய அறிமுகவுரை பகுதிகளைத் தேர்ந்தெடுத்தலில் இவை கிரியா ஊக்கிகளாக அமையும். காண்: www.taize.fr/bible

விசுவாச திருப்பயணம் - 2022

- பெருந்தொற்றின் விளைவுகள் தொடர்ந்தாலும், “தெய்சே” மற்றும் பிற இடங்களிலும் நமது விசுவாச திருப்பயணத்தை நம்பிக்கையோடு தொடர முற்படுகிறோம்...
- ”தெய்சே” வில் வாராந்திரக் கூட்டங்களை ஆண்டு முழுவதும் நடத்துவது.
- புனிதத் தலங்களுக்கு (பாலஸ்தீனம்) திருப்பயணம் - மே 8 முதல் மே 15, 2022 வரை...
- இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ இளைஞர்களுக்கான நட்பின் கூடுகை - ஜூலை 13 முதல் 17, 2022 வரை...
- 18 முதல் 35 வயதினருக்கான கருத்துப் பரிமாற்ற வாரம் - ஆகஸ்டு 21 முதல் 28, 2022 வரை. இந்த வாரத்தில் நடத்தப்படும் பல்லுயிர் பாதுகாப்பு குறித்த சிறப்பு நிகழ்வில் விருப்பம் உள்ளவர்கள் பங்கேற்கலாம்.

**முதல் முன்மொழிவு:**

## ஏற்றுக்கொள்வதில் மகிழ்வது

மானுட இனத்தின் ஒற்றுமைக்கும் அது சார்ந்த அன்பின் எதிர்காலத்திற்கும் நாம் அனைவருமே பங்களிக்க முடியும். இப் பங்களிப்பானது, நாம் ஒருவரோடு ஒருவர் உருவாக்கிக் கொண்டிருக்கும் உறவு நிலைகளிலிருந்தே தொடங்குகிறது. நாம் நமது குடும்பங்களுக்குள்ளும், உறவினர்கள் மற்றும் நண்பர்களுடனும், குறிப்பாக சோதனையான காலகட்டத்தில், உண்மையான அக்கறைக் கொண்டவர்களாக இருக்கவேண்டியுள்ளது.

நம்மிலிருந்து வித்தியாசமான பின்னணி கொண்டவர்களை திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு தருணத்திலும் மானுட குடும்பத்தின் ஒற்றுமை மேம்படுகிறது. எதிர்ப்பார்ப்புகள் ஏதுமில்லாமல் மனிதர்களை, குறிப்பாக வழக்கமாக நாம் சந்திக்காத நபர்களையும், தேடிச்செல்வோமா? ஆச்சரியப்படும் வகையில் கற்பனையிலும் நாம் நினைத்துப் பார்க்காத பலவற்றை நாம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறோம்.

தயக்கத்தாலும் பயத்தாலும் நம்மை நாமே ஊனமாக்கிக்கொள்ளாவிட்டால் பெறுவதில் கிடைக்கக்கூடிய இன்பம் நமக்கு வந்துசேருகிறது. பிறருடன் உறவு கொள்ளும்போது நாம் நமது சொந்த அடையாளத்தை கண்டுபிடிக்கிறோம். மனதின் ஆழத்தில் நாம் கொண்டிருக்கும் சோகத்தை வெளிக்கொண்டுவர அவர்களால் உதவமுடியும். அதுமட்டுமல்லாமல் (நமது இருப்புக்கான அர்த்தத்தையும்) நாம் வாழ்வதற்கான அர்த்தத்தையும் அவர்களால் வழங்க முடியும்.

இயேசு தன்னுடைய உவமகளில் ஒன்றில் இவ்வாறு கூறுகிறார்...

“காயம்பட்ட ஒரு மனிதன் தன்னைக் கடந்து செல்லும் ஒரு அந்நியனிடமிருந்து உதவி பெறுகிறான்” இதைச் செய்வதன் வாயிலாக அந்த மனிதன் என அரசியல் மற்றும் மதம் சார்ந்த தடைகளைக் கடந்துசெல்லும் இடரினை மேற்கொள்கிறான். இந்தத் தன்னிச்சையான உதவியினால் அந்த நாளில் காயப்பட்ட தனது அயலானின் வாழ்வுக்கு ஒரு அர்த்தத்தைக் கொடுக்கிறான் அல்லவா? இன்றளவும் நல்ல சமாரியன் என்னும் அந்த மனிதனை நாம் நினைவு கூறுவதோடு, மனக்கண்ணில் தோன்றும் அந்த உருவத்தால் நாம் ஈர்க்கப்படுகிறோம்.

> மனிதனாய் இருப்பதின் சாராம்சம் என்ற பொருள்படக்கூடிய "UBUNTU (உபுண்டு)" என்னும் நமது நாட்டில் கேள்விப்படுகிறோம். மனிதன் தனிமைப்படுத்தப்பட்டவனாக வாழ முடியாது என்கிற உண்மையை குறிப்பாக உணர்த்துகிறது உபுண்டு. உறவுப் பிணைப்புகளைப்பற்றி அது பேசுகிறது. தனிநபர்களாக பிறரிடமிருந்து பிரிந்துகிடப்பவர்களாக பல நேரங்களில் நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம். ஆயினும் நாம் பிறரோடு இணைப்பில் இருக்கிறோம், நமது செயல்கள் இந்த ஒட்டுமொத்த உலகத்தையே பாதிக்கக் கூடியவையாக இருக்கின்றன.
>
> ஆங்கிலிக்கன் ஆர்ச்பிஷப் எமிரேட்ஸ் டாஸ்மண்ட் டுட்டு, நிறவெறிக்கு எதிரான மற்றும் நல்லிணக்கத்திற்கான சவுத் ஆப்பிரிக்கா போராளி.

**இரண்டாவது முன்மொழிவு:**

## உரையாடல்களை பேணி வளர்ப்பது

நம்பிக்கையின் அடிப்படையில் பிணைப்புகளை உருவாக்குவதே ஒற்றுமையை வளர்ப்பதற்கு அடிப்படையாகும். ஆனால், பலநேரங்களில் மனித உறவுகள் அவநம்பிக்கையால் பாதிப்புக்கு உள்ளாகின்றன. பொது விவாதங்களிலும் சமூக ஊடகங்களிலும் நாம் வெளிப்படுத்தும் வார்த்தைகளில் வன்முறையானது சர்வ சாதாரணமாக நிகழ்த்தப்படுகிறது. அதனால் மக்கள் அச்சத்திற்கு ஆளாகின்றார்கள். இத்தகைய பின்னடைவுகளை நாம் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்?

உரையாடல்களில் பங்கேற்பதை நாம் கவனமுடன் கேட்டு, தேர்ந்தெடுக்க முடியும். மற்றவரின் கருத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோம் அல்லது பகிர்ந்து கொள்கிறோம் என்பது அல்ல இதன் அர்த்தம். மாறாக, நம்மைவிட வித்தியாசமாக சிந்திப்பவர்களின் உடனான உரையாடலைத் தொடர தேவையான அனைத்தையும் நாம் செய்யத் தயாராக இருக்கிறோமா என்பதுதான் முக்கியம். உரையாடல் தடைபடாமல் இருக்க நமது சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்ய நாம் தயாராக வேண்டும்.

அடுத்தவர் மீது தரக்குறைவான மதிப்பீடுகளை சுமத்துவதையும் அவர்கள்மீது தவறான முத்திரை குத்துவதையும் இனி செய்யமாட்டோம் என நாம் முடிவெடுப்போம். நம்முடைய சொந்தக் கருத்திற்காகவோ அல்லது செயலுக்காகவோ யாரும் எந்தவகையிலும் சிறுமைப்படக்கூடாது (யாரையும் குறைத்து மதிப்பிடக்கூடாது). அது அறிவுக்குப் பொருந்தாத அடிப்படை வாதமேயானாலும், நமக்கு அதில் உடன்பாடில்லை என்பதை பொறுமையோடு, அவர்களின் மனம் புண்படாத வகையில் வெளிப்படுத்த வேண்டும்; அதே நேரம் அநீதியான சூழ்நிலைகளுக்கு எதிராக நமது கோபத்தை கட்டாயம் பதிவு செய்யப்படவும் வேண்டும்.

ஒருவர் தன் சொந்த அடையாளத்தை பாதுகாப்பதில் ஏற்படும் எதிர்வினைகள், சமூகத்தில் பிளவுகள் உண்டாகவும் காரணமாகிவிடுகின்றன; இது கிறிஸ்தவ சமூகங்களுக்கும் பொருந்தும். எதிரிகளாக நம்மை தீர்மானிப்பதற்குப் பதிலாக, மற்றவர்களால் நம்மை தவிக்க முடியாத நபராக, வெளிப்படைத் தன்மையுடன் ஏற்றுக்கொள்ளச் செய்யும் தகுதி மிக்கவர்கள் நாம் என்ற அடையாளத்தை நம்மால் உருவாக்க முடியுமா?

> மிகமுக்கியமான கருத்துக்களில் மாறுபட்டு, வித்தியாசமாக சிந்திக்கும் மக்களிடம் தான் உண்மையான, மிக நெருக்கமான நட்புறவைக் காணமுடியும். இது இயல்பாகவே வலிமிகுந்த சிரமங்கள் அடங்கியதாக இருந்தாலும், நண்பர்களை இன்னும் நெருக்கமானவர்களாக மாற்றுகிறது.
>
> - ஜாக்கஸ் மேரிடைன், பிரண்ட்ஸ் தத்துவவியலாளர் (1970)

மூன்றாவது முன்மொழிவு:
## நாமனைவரும் சகோதர சகோதரிகளே…

சமூக சமத்துவமின்மையை புறக்கணித்தால்தான் நாம் ஒற்றுமையில் வளர முடியும். அத்தகைய முரண்பாடுகளை வேரோடு வீழ்த்தும்போதுதான், அந்த வலிமையை உணர்ந்த பெரும்பான்மை மக்களாகவும் பல நேரங்களில் ஒட்டுமொத்த தேசத்தினாலும் கூட கடவுளின் சாட்சிகளாய் நாம் விளங்கமுடியும்.

அனைத்து திருச்சபைகளையும் சார்ந்த கிறிஸ்தவர்கள், பிறமத நம்பிக்கையாளர்கள், நல்ல உள்ளம் படைத்த நாத்திக ஆண், பெண்கள் மட்டுமல்லாது, தங்கள் வாழ்க்கைப் பயணத்தில் அடிக்கடி பெரும் துன்பங்களை அனுபவித்துவரும் அகதிகள், புறக்கணிக்கப்பட்டோர், பேரிடர் மற்றும் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டொர் மற்றும் அபாயகரமான சூழலில் சிக்கித் தவிப்பவர்கள் என பலவித மக்களோடும் ஒருங்கிணைந்து, ஒற்றுமையோடும் நாம் பயணிக்க முடியும்.

சகோதரத்துவ வாழ்வு என்பது, நம் வீட்டு வாசலில் துவங்குகிறது. பிரிவினை வாதங்களைக் கடந்து, நல்ல நட்பை உருவாக்குவோம். நிபந்தனைகளற்ற திறந்த மனதுடன், மனிதாபிமானம் நிறைந்த மிதநேயத்தை நமதாக்கிக் கொள்வோம்.

நமது தனிப்பட்ட வாழ்க்கைமுறைகள், மற்றவர்களிடத்தில் இன்னும் ஆழமாகச் சொல்ல வேண்டுமானால் உலகம் முழுவதும் கூட, எந்த அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்ற விழிப்புணர்வு நம்மிடம் இருக்கிறதா?

சகோதர சகோதரிகளாக வாழும் விசுவாசிகளை, இறை நம்பிக்கையிலிருந்து பிரிக்க முடியாது. “மிகச்சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததை எல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 25:40) என்று இயேசு சொல்கிறார். இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்ததன் மூலம் எல்லா மனிதர்களுடனும் ஒன்றிணைக்கப்பட்டார். வாழ்க்கையில் காயம் பட்டவர்களிடம் நாம் செல்லும் போது, அவரிடம் நாம் நெருங்கி வருகிறோம். அந்தக் காயம்பட்ட மனிதர்கள் ஆண்டவரோடு தமது உறவை ஆழப்படுத்துகிறார்கள்.

இன்றையக் காலக்கட்டத்தில் நமது மனங்களில் ஏற்படவேண்டிய அடிப்படை சிந்தணை மாற்றங்களே நமக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கிறது. அதாவது, நம் ஒவ்வொருவரிடமிருந்தும் வெளிப்படக் கூடிய புரட்சிகர சிந்தனைகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதுதான் அது. நாம் நமது தாழ் நிலையை ஏற்றுக்கொள்ளத் துவங்கும்போது, அடுத்தவரின் பாதங்களைக் கழுவத் துவங்கும்போது, ஒளிமிகுந்த அன்புடன் நமது சகோதர, சகோதரிகளை நேசிக்கும் போது, பிறருக்காக துன்பச் சிலுவையை சுமக்க தூண்டிய அந்தப் பேரன்பை நமதாக்கிக் கொள்ளும்போது நாம் உண்மையாகவே சொல்ல முடியும் "இப்போது நான் துவங்கி விட்டேன்" என்று.

- அமெரிக்க பத்திரிக்கையாளர் டோரதி டே, 1963 இல் நடைபெற்ற மனித உரிமைப் போராட்டத்தில் முன்னிலை வகித்துப் பேசியது.

நான்காவது முன்மொழிவு:
## படைப்புகள் அனைத்துக்குமான ஒருமைப்பாடு

படைப்புகளின் ஓர்மையை நம்மால் மிகத் தெளிவாகக் காண்ஃஅமுடிகிறது. உயிர் வாழ்வன அனைத்தும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றன என்பதை நாம் உணரும்படி செய்கின்றன. அவை அனைத்துக்கும் ஆதரவான உடன்பிறப்புகளாக நாம் இருக்கிறோம் என்பதையும் உணர்த்துகின்றன.

ஒரு அற்புதமான உலகம் நம் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இறைவனால் நமக்களிக்கப்பட்ட கொடை இது. இதை நாம் நமது அடுத்தத் தலைமுறையினரிடம் நம்பிக்கையோடு ஒப்படைக்க வேண்டும் என்பதையும் இறை மக்களாகிய நாம் அறிந்திருக்கிறோம்.

ஆனால், மனித குலத்தின் சுயநல நடவடிக்கைகளால் இவ்வுலகம் இன்று எவ்வளவு பலவீனம் அடைந்திருக்கிறது என்பதையும் நம்மால் காணமுடிகிறது. சமீப காலங்களில், உலகின் பல பகுதிகளில் சுற்றுச்சூழல் பேரழிவுகள், பெருந்தொற்று நோய் பாதிப்புகள், தீவிரவாத அச்சுறுத்தல்கள் உள்ளிட்ட மிகப்பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்த இக்கட்டான காலகட்டத்தில் பல்வேறு நெருக்கடிகளால் மக்கள் வாழ்வதற்கு தகுதியற்றதாகிவிட்ட தங்களது தாய் மண்ணில் இருந்து ஏராளமான மக்கள் அகதிகளாக

வெளியேறும் கட்டாயத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள். பல்லுயிர் அழிவு பற்றி பல்வேறு ஆராய்ச்சி அமைப்புகள் நம்மை நீண்டகாலமாகவே எச்சரித்து வருகின்றன. இந்த சூழலியல் அவசர நிலையை எதிர்கொள்ளத் தேவையான அரசியல் தீர்வுகள், அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் சமூக சவால்களை நாம் மேற்கொள்ளவேண்டியது இன்றைய அவசர அவசியமாக இருக்கிறது. இதுகுறித்து பல இளைஞர்கள் மிகத் தைரியமாக தங்கள் கடமைகளை உணர்ந்து, அதற்கான நிலைப்பாட்டை சீரான நிலையில் தங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களில் சிலர் கோபம், வெறுப்பு, விரக்தி ஆகியவற்றால் ஆட்கொள்ளப்பட்டும் இருக்கிறார்கள். அவர்களது நிலையையும் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

இவற்றுக்கெல்லாம் நாம் மனம் தளரக்கூடாது.

பல நேரங்களில் “கிட்டத்தட்ட ஒன்றுமில்லை" என்கிற சூழ்நிலைகளிலிருந்து தான் "நிலைமாற்றம்" என்பது துவங்குகிறது. இறை பற்றாளர்களாக இருக்கும் நமக்கு இந்த நெருக்கடிகளுக்கு தீர்வு காண்கின்ற மனிதஆற்றலின்மேல் கடமைப்பொறுப்பும் நம்பிக்கையும் தொடர, கடவுள் மீதான ஆழ்ந்த நம்பிக்கையே உந்து சக்தியாக இருக்கிறது.

நாம் அனைவரும் நம்மை நாமே கேட்டுக் கொள்வோம்... ஒரு சூழலியல் சார்ந்த கொள்கை மாற்றத்தை தொடங்க அல்லது மேன்மைப்படுத்தக் கூடிய எவ்வித உறுதியான சிறு முயற்சியை நாம் உடனடியாக எடுக்க முடியும்?

> யாராயிருந்தாலும் எந்தச்சூழலில் இருந்தாலும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அச்சுறுத்தும் காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவுக்கு எதிரான மாற்றத்தில் பங்கு வகிக்க முடியும். இறைவனின் படைப்புகளின் மீது அக்கறை கொள்வதென்பது அதீத கடமை உணர்வைக் கோரும் ஆன்மீக பொறுப்பு ஆகும். இது ஒரு முக்கியமான தருணம். நமது குழந்தைகளின் எதிர்காலமும் நம் அனைவருக்கும் சொந்தமான இல்லத்தின் எதிர்காலமும் இதையே நம்பி இருக்கிறது.
>
> - செப்டம்பர் 1, 2020 அன்று வெளியிடப்பட்ட போப் பிரான்சிஸ் பேட்டரி ஆக் பர்த்தலமேயு மற்றும் கேன்டன்பரியின் பேராயர் ஜஸ்டின் வெல்பி ஆகியோரின் கூட்டறிக்கை.

**ஐந்தாவது முன்மொழிவு:**

## கிறிஸ்தவ ஒற்றுமைக்கான பேரார்வம்

"ஒற்றுமைக்கானத் தேடல்" என்பது கிறிஸ்தவர்களுக்கு ஆகப்பெரும் சவாலாகவே இருக்கிறது. பிரிவினைகளை பேணிக்காத்து வரும் மோசமான சூழலில் நாம் எப்படி சகோதரத்துவத்தின் "புளிப்புமாவாக" இருக்க முடியும்? “ஒற்றுமைக்கான தனித்துவ ஆதாரத்தை நாம் கிறிஸ்துவில் காண்கிறோம்” (யோவான் 17 : 20 - 21, எபேசியர் 2:14). மனிதர்களுக்கிடையே நிலவும் தடைச்சுவர்களை உடைத்து, வெறுப்பை அழிப்பதற்காக சிலுவையில் தன்னுயிரை அற்பணித்ததின் மூலம், அன்பின் அதிகபட்ச எல்லைக்கே சென்றார் நம் இயேசுகிஸ்து.

பிரிவினைகளுக்கு அப்பால் சென்று, அதீத வேற்றுமைகளுக்கு மத்தியிலும் சாத்தியப் படுத்தக்கூடிய ஒற்றுமைக்கு சாட்சியமளிக்க நற்செய்தி நம்மை அழைக்கிறது. மானுட குடும்பத்தை சகோதரத்துவத்துடன் ஒன்றுபட்டு வாழச் செய்யும் அழைப்பை கிறிஸ்தவர்கள் பெற்றிருப்பது அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஒரு முக்கியமான பங்களிப்பு அல்லவா? இவ்வகையான சாட்சியம் வார்த்தைகளைவிட சத்தமாக ஒலிக்கிறது.

ஒற்றுமையை உருவாக்கும் கலையை பேணி வளர்ப்பதற்கு நற்செய்தி நம்மை கட்டாயப்படுத்துகிறது. நாம் இருக்கும் இடத்தில் இருந்தபடியே செவிமடுத்தலுக்கான இணைப்புகளை உருவாக்குதல் மற்றும் நட்புறவின் மூலம் ஒற்றுமையின் படைப்பாளிகளாக நாம் மாறமுடியும்.

கிறிஸ்தவ உட்பிரிவுகளைக்கிடையே நிகழும் உரையாடல்களில் உள்ளே நிலவும் வேறுபாடுகள் மிக உன்னிப்பாக கவனிக்கப்படுவது மற்றும் அவைக்ஜள் குறித்த இறையியல் ஆய்வும் இன்றியமையாததாகும். ஆனால், உரையாடல் மட்டுமே வெளிப்படையான ஒற்றுமைக்கு வழிவகுத்து விடாது.

இதை சாத்தியப்படுத்துவதற்கு, வெவ்வேறு திருச்சபைகளைச் சார்ந்த திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் அடிக்கடி ஒன்றுகூட வேண்டும். இறைவார்த்தையை மையப்படுத்திய பொது ஜெப கூடுகையாக அது இருக்க வேண்டும். யாருக்குத் தெரியும் தூய ஆவி நம்மை ஆச்சரியப்படுத்தக் கூடும். நம்மிடமுள்ள குறைகளை நாம் தாழ்மையுடன் ஒப்புக்கொண்டு, மற்றவர்களை திறந்த மனதுடன் ஏற்றுக் கொள்ளும்போது, நம்மை ஒன்று

சேர்ப்பவராக இயேசுவை நாம் கண்டு பிடிப்பதோடு அக்கிறிஸ்துவின் அன்பு இன்னும் தெளிவாக வெகு தொலைவிற்கு ஒளி வீசும்படி நம்மை மாற்றக்கூடும்.

ஒருவரிடமிருந்து மற்றவர் கொடுக்கவும் பெறவும் ஒப்புக்கொள்வதே மிகவும் முக்கியமாகும். இதன் நோக்கம் பிடிவாதமான சமய சித்தாந்த சார்பியல் வாதத்தில் சிக்கிக் கொள்வதல்ல. மாறாக, வெவ்வேறு பாதையில் பயணிக்கும் நாம் அப்போஸ்தல நம்பிக்கையின் இன்றியமையாதக் கூறுகளை வெளிப்படுத்த வேண்டும். அதோடு, தூய ஆவியின் மீது நம்பிக்கைக் கொண்டு புதிய வெளிப்பாட்டை எதிர்பார்த்துக் காத்திருப்பதும் அதை வரவேற்கத் தயாராக இருப்பதுவுமே நம் இலக்கு.

- ஆர்த்தடாக்ஸ் இறையியலாளர் எலிசபெத் பெஹர் சிகல் (1986).

**ஆறாவது முன்மொழிவு:**

## இறைவன் நம் இதயங்களை ஒருங்கிணைக்கட்டும்

ஒற்றுமை வ்ளர்ச்சிகு நம்மையே நாம் முழுவதுமாக அர்ப்பணிக்கவேண்டியுள்ளது. குறிப்பாக, ஒற்றுமை நம்முடைய இதயத்திலிருந்து / உள்ளத்திலிருந்து துவங்க வேண்டியுள்ளது. ஒரு பழமையான சங்கீதத்தின் வார்த்தைகளில் இறைவனை நோக்கிய நமது ஜெபம் இவ்வாறு எழுப்பப்படுகிறது... "உமது பெயருக்கு அஞ்சுமாறு என் உள்ளத்தை ஒருமுகப் படுத்தும்" (திருப்பாடல் 86:11)

உள்மன ஒருமைப்பாட்டை நோக்கி நகரும்போது, சிலசமயங்களில் நாம் எல்லாவற்றையும் செய்யமுடியாது; அல்லது எல்லாவித அனுபவங்களையும் பெற்றுவிட முடியாது என்கிற புரிதலோடு, நமது விருப்பத்தேர்வுகளை வரிசைப்படுத்த வேண்டியது அவசியமல்லவா? நம் முன்னால் பல வாய்ப்புகள் காத்துக்கிடக்கும்போது, அவற்றில் எதெல்லாம் அமைதி, வெளிச்சம் மற்றும் மகிழ்ச்சியை நோக்கி விரைவாக நம்மை அழைத்துச் செல்லும் / வழி நடத்தும் என கண்டறிய முயற்சிப்போம்.

இறைவனிடமிருந்து வரும் கூட்டுறவு மற்றும் ஒற்றுமைக்கான ஆழ்ந்த தாகம் நமக்குள் இருக்கும். அதை நாம் ஜெபத்தில் வெளிப்படுத்த முடியும். மிகக் குறைந்த வார்த்தைகளோடு அமைதியில் இறைவனோடு அதிகமாய் இருப்பதும்கூட வாழ்வின் அர்த்தத்தை நாம் கண்டுக்கொள்ள உதவும்; தூய ஆவியானவர் நம்மில் செயல்பட அனுமதிக்கும் நமது தயார் நிலையை அது புதுப்பிக்கும்.

உள்ளத்தின் ஒற்றுமையைக் கண்டறிதலை சாத்தியப்படுத்தும் ஒரு வழி எப்போதும் உண்டு. இயேசு கிறிஸ்துவை நோக்கி நமது கண்களைத்திருப்பி, அவரைப் பற்றிய அறிவில் வளர்ந்து, அவரிடம் நமது சுக துக்கங்களை நம்பி, ஒப்படைப்பதே அந்த வழி! இடர்களின் மத்தியிலும், எதிர்காலம் குறித்த மிகக்குறைவான வாய்ப்புகளுக்கு நடுவிலும் நமது பயணத்தை படிப்படியாகத் தொடரலாம்.

தூய ஆவியின் வழியாகவும், உயிர்த்தெழுந்த கிறிஸ்து எப்போதும் நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையிலும் நம்மால் நிலைத்து பயணிக்க முடியும்.

அமைதியில் நுழைவது என்பதன் பொருள் இறைவனுக்கு செவிமடுப்பது என்பதாகும். அமைதி என்பது இறைவனின் குரலைக் கேட்பதற்குத் தடையாய் இருக்கும் அனைத்தையும் விலக்கிவிடுகிறது. அதாவது ஜெபிக்கும் போதும், நேரடியாக ஜெபிக்காதபோதும் கூட இறைவன் தனது விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கு நாம் செவிமடுக்கும் சூழலை அமைதி ஏற்படுத்தித்தருகிறது.

இறைவனின் திட்டத்தை செயல்படுத்த இந்த அமைதி நமக்கு தேவைப்படுகிறது. நம் இயற்பண்பான அலட்சியம், அறியாமையால் தோன்றும் வெறுப்பு அல்லது வேறுபல காரணங்களால் அமைதி நீட்டிக்கப்படுகிறது.

ஒரு விவசாயி தனது அறுவடையை கவனமாய் சேகரித்து, களஞ்சியத்தில் சேர்ப்பது போல, ஆராய்ச்சியாளர் தனது ஆய்வின் முடிவுகளை சரியாக ஒழுங்கமைப்பதுபோல, நாமும் கடவுளின் கட்டளைகளை, சுவடுகளை, தடயங்களை, அழைப்புகளை கவனமுடன் சேகரிக்க வேண்டும்.

- பிரெஞ்சு எழுத்தாளர் மற்றும் சமூகப் பணியாளர் மேடலின் டெல்ப்ரெல் (1968)